# தேவனுடைய ஒரேபேறானவர் - இயேசு கிறிஸ்து

பாடல் - 1

# ஸ்தோத்திரம் இயேசு நாதா


dreamstime.com
ID 112900868 © Ig0rzh

ஸ்தோத்திரம் இயேசு நாதா
உமக்கென்றும் ஸ்தோத்திரம் இயேசு நாதா
ஸ்தோத்திரம் செய்கின்றோம் நின்னடியார்
திருநாமத்தின் ஆதரவில் - 2

வானதூதர் சேனைகள் மனோகர கீதங்களால்எப்போதும் - 2
ஓய்வின்றி பாடி துதிக்கவே பெறும் மன்னவரே உமக்கு – 2

எத்தனை மகத்துவமுள்ள பதவி இவ்வேழைகள்
எங்களுக்கு - 2
எத்தனை மாதயவு நின் கிருபை எத்தனை ஆச்சரியம்-2

-ஸ்தோத்திரம் இயேசு...

நின் உதிரமதினால் திறந்த நின் ஜீவ புது வழியாம் - 2
நின் அடியார்க்கு பிதாவின் சந்நிதி சேரவுமே சந்ததம்-2

-ஸ்தோத்திரம் இயேசு...

•

இன்றையத் தினமதிலும் ஒருமித்து கூட உம்
நாமத்தினால் - 2
தந்த நின் கிருபைக்காய் உமக்கென்றும்
ஸ்தோத்திரம்
ஸ்தோத்திரமே -2

-ஸ்தோத்திரம் இயேசு...

# நீதிமொழிகள் 8: 22 -31

கர்த்தர் தமது கிரியைகளுக்குமுன் பூர்வமுதல் என்னைத் தமது வழியின் ஆதியாகக்கொண்டிருந்தார்.

23. பூமி உண்டாகுமுன்னும், ஆதிமுதற்கொண்டும் அநாதியாய் நான் அபிஷேகம்பண்ணப்பட்டேன்.

24. ஆழங்களும், ஜலம் புரண்டுவரும் ஊற்றுகளும் உண்டாகுமுன்னே நான் ஜநிப்பிக்கப்பட்டேன்.

25. மலைகள் நிலைபெறுவதற்கு முன்னும், குன்றுகள் உண்டாவதற்கு முன்னும்,

- 26. அவர் பூமியையும் அதின் வெளிகளையும், பூமியிலுள்ள
- மண்ணின் திரள்களையும் உண்டாக்குமுன்னும் நான்
- ஜநிப்பிக்கப்பட்டேன்.

27. அவர் வானங்களைப் படைக்கையில் நான் அங்கே
- இருந்தேன்; அவர் சமுத்திர விலாசத்தை வட்டணிக்கையிலும்,
- 

28. உயரத்தில் மேகங்களை ஸ்தாபித்து, சமுத்திரத்தின்
- ஊற்றுகளை அடைத்து வைக்கையிலும்,


29. சமுத்திர ஜலம் தன் கரையை விட்டு மீறாதபடிக்கு அதற்கு
- எல்லையைக் கட்டளையிட்டு, பூமியின் அஸ்திபாரங்களை
- நிலைப்படுத்துகையிலும்,

30. நான் அவர் அருகே செல்லப்பிள்ளையாயிருந்தேன்; நித்தம் அவருடைய மனமகிழ்ச்சியாயிருந்து, எப்பொழுதும் அவர் சமுகத்தில் களிகூர்ந்தேன்.

31. அவருடைய பூவுலகத்தில் சந்தோஷப்பட்டு, மனுமக்களுடனே மகிழ்ந்துகொண்டிருந்தேன்.

அன்பானவர்களே நமது கர்த்தருடைய துவக்கம் விசேஷமானது! துவக்கமும் முடிவுமற்ற நம் பிதாவாகிய தேவனின் முதலும், கடைசியுமான படைப்பாக, அவர் சிருஷ்டிக்கப்பட்டார் என்று வேத வாக்கியங்களில் நாம் காணும்போது, துவக்கம் என்ற வார்த்தையின் பொருளும் அவரிடமிருந்தே துவங்குகிறது. நமது பிதாவினால் “வார்த்தையானவராக”(லோகோஸ்) அவர் சிருஷ்டிக்கப்பட்டார். “நீர் என்னுடைய குமாரன், இன்று நான் உம்மை ஜெநிப்பித்தேன் என்றும், நான் அவருக்கு பிதாவாயிருப்பேன் அவர் எனக்கு குமாரனாயிருப்பார்” என்று எழுதப்பட்டிருப்பதன் மூலம், அவர் தேவனுடைய ஒரேபேறானவராக இருக்கிறார் என்பதை நாம் அறிகிறோம். மேலும், அவரைத் தவிர, மற்ற சிருஷ்டிப்புகள் அனைத்தும் அதாவது பரலோகத்திலுள்ளவைகளும், பூலோகத்திலுள்ளவைகளுமான காணப்படுகிறவைகளும், காணப்படாதவைகளுமான சகலமும் அவரைக் கொண்டும், அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது.

நமது பிதாவாகிய தேவன் அண்டசராசரத்தின் மகாராஜாவாக வீற்றிருக்க, அவருடைய ஒரேபேறானவர், பரலோகத்தின் இளவரசராக வீற்றிருக்கிறார். ஆ! எப்பேர்பட்ட மகிமை! நமது தேவனுடைய மாபெரும் சிற்பியாகிய அவரைக் கொண்டும், அவருக்கென்றுமே படைக்கப்பட்ட சிருஷ்டிப்புகளில், சில உதாரணங்கள் இதோ!















# ஏசாயா 6:8

- பின்பு: யாரை நான் அனுப்புவேன், யார் நமது காரியமாய்ப் போவான் என்று உரைக்கிற ஆண்டவருடைய சத்தத்தைக் கேட்டேன். அதற்கு நான்: இதோ, அடியேன் இருக்கிறேன்; என்னை அனுப்பும் என்றேன்.

# லூக்கா 2:10-14

- தேவதூதன் அவர்களை நோக்கி: பயப்படாதிருங்கள்; இதோ, எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன்.

  11. இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்குத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார்.

  12. பிள்ளையைத் துணிகளில் சுற்றி, முன்னணையிலே கிடத்தியிருக்கக் காண்பீர்கள்; இதுவே உங்களுக்கு அடையாளம் என்றான்.

# லூக்கா 2:10-14

- 13. அந்தக்ஷணமே பரமசேனையின் திரள் அந்தத் தூதனுடனே தோன்றி:

  14. உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக என்று சொல்லி, தேவனைத் துதித்தார்கள்.

இப்பேர்ப்பட்ட நமது மகிமையின் கர்த்தர், பழைய ஏற்பாட்டின் காலத்தில் பிரதான தூதனாகிய “மிகாயேல்” ஆகவும், தேவனுடைய பிரதிநிதியாகவும் இருந்தார். காலம் நிறைவேறின போது, பூமியில் மனுக்குலத்தின் மீட்பராக, பரிசுத்தமுள்ளவராக, பரிபூரண குழந்தையாக கன்னிகையின் வயிற்றில் பிறந்தார். அவருடைய பிறப்பு அதிசயமானது,அது தேவ வல்லமையினால் நடந்தது.பரலோகத்தில், “இதோ யாரை நான் அனுப்புவேன், யார் நமது காரியமாய்ப் போவான்?” என்ற சத்தம் கேட்கப்பட்ட உடனே, யாருடைய வற்புறுத்துதலும் இன்றி தாமாக முன்வந்து, பிதாவின் உறவிலிருந்து பிரிந்திருந்த மனுக்குல குடும்பத்தை ஒப்புரவாக்கவும் ஊழியத்தின் மீட்பராய், தனது பரலோக மகிமையை துறந்து, பூமிக்கு வர ஆயத்தமானார்!வந்தார்! வேதவாக்கியங்களில், “அவர் நமது நிமித்தம் தரித்திரர் ஆனார்” என்று காணும்போது இவ்வுலகத்திற்கு வருமுன், பிதாவிடம் அவர் பெற்றிருந்த மகிமையை துறந்ததையே அது குறிக்கிறது என்று உணர்கிறோம்.

உண்மையில் மற்றவர்களைப் போல நாம் கிறிஸ்துவின் பிறப்பைக் கொண்டாடுவதில்லை. ஆனால், மனுக்குலத்தை மீட்க தேவனுடைய ஒரேபேறானவரே பூமியில் பிறந்தார் என்பதைக் காணும்போது, பரமசேனையின் திரளுக்கு உண்டானது போல, நமது இருதயத்திலும் மகிழ்ச்சியின் பாடல் உண்டாவது இயல்பானதே!

## பாடல் - 2

# பிறந்தார்

பிறந்தார் பிறந்தார்

பிறந்தார் பிறந்தார்

வானோர் ராஜன் பிறந்தார் பிறந்தார்

பூவினை மீட்கப் பரலோகப் பூமான் பூதலந்தனில் பிறந்தார்

பூட்டிய வீட்டுயர் வாசலைத் திறக்கப் பூலோகத்தில்

பிறந்தார் - 2

வாசல்களே உயருங்கள் கதவுகளே திறவுங்கள் -2

வானாதி ராஜன் வல்லமை தேவனை வாழ்த்தி

வழிவிடுங்கள்

ஆக்கினைத் தீர்ப்பை அடையாதவாறு அடைக்கலந்தரப் பிறந்தார்

ஆருயிரீந்து அன்பினைக் காட்ட ஆண்டவரே பிறந்தார்- 2

ஆத்துமமே ஸ்தோத்தரி அல்லேலூயா ஆர்ப்பரி -2

ஆண்டவரான அருளுள்ள வள்ளல் ஆள ஆசைப்படுங்கள்

அன்பானவர்களே, நமது கர்த்தர்,

பரிபூரண குழந்தையாகப் பிறந்தார்,

பரிபூரண சிறுவராக வளர்ந்தார்,

பரிபூரண இளைஞராக இருந்தார்,

பரிபூரண மனிதராகிய கிறிஸ்து இயேசு ஆனார். இவ்வாறு எப்போதும், பரிசுத்தராக, குற்றமற்றவராக, மாசில்லாதவராக, பாவிகளுக்கு விலகினவராக இருந்தார். அவருடைய அழகிய தோற்றம் மற்றும் குணாதிசயத்தைப் பற்றிய சில பதிவுகள்.

ஆம்! “அவருடைய மகிமையைக் கண்டோம், அது பிதாவுக்கு ஒரேபேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது.” என்று அப்போஸ்தலர்களும் கூறும் வண்ணம் இருந்தது. அவர் தனது 30-ம் வயதில் வேளை வந்தபோது, யோர்தானில் தனது ஞானஸ்நானத்தின் மூலம் பிதாவின் சித்தத்திற்கு தன்னை ஒப்புவித்தார். அதுமுதல் அதற்காக தன்னைப் பலியாக்கிக் கொண்டே இருந்தார். சத்தியத்திற்கு சாட்சி கொடுக்கவும், மற்றவர்களுக்கு ஊழியஞ்செய்யவும், இராஜ்ஜியத்தின் சுவிசேஷத்தை அறிவிக்கிறதுமாக இருந்தது அவருடைய ஊழியம். தண்ணீரை திராட்சை ரசமாக மாற்றவும், குருடர்களைப் பார்க்கச் செய்வதும், செவிடரை கேட்கச் செய்வதும், முடவர்களை நடக்கச் செய்வதும், மரித்தோரை எழுப்புவதும், காற்றையும் கடலையும் அடக்குவதும், அப்பம் மற்றும் மீன் துண்டுகளை அநேகருக்குப் பகிர்வதும், இன்னும் அநேக வியாதியஸ்தர்களை குணமாக்குவதும் என்று அற்புதங்களால் நிறைந்திருந்தது அவருடைய ஜீவியம்.

## பாடல் - 3

# அதிசயங்கள் செய்கிறவர்

அதிசயங்கள் செய்கிறவர் நம்
அருகில் இருக்கிறார்
அற்புதங்கள் செய்கிறவர்
என்றும் நமக்குள் வசிக்கிறார் - 2

ஐந்தப்பம் இரண்டு மீன்
பகிர்ந்திட்டார் அதிசயம் - 2
வெறும் தண்ணீரைத் திராட்ச
ரசமாய் மாற்றினார் அதிசயம் - 2

குருடருக்கும் செவிடருக்கும்
சுகம் தந்தார் அதிசயம் - 2
ஒரு சொல்லாலே மரித்தோரை
எழுப்பினார் அதிசயம் - 2

அன்பான சகோதர சகோதரிகளே, இப்படியாக நமது கர்த்தருடைய கடைசி மணிநேரங்கள் அவரை நெருங்கியது. கெத்சமனேயில் நமது கர்த்தரின் ஆத்துமா மரணத்திற்கேதுவான துக்கங் கொண்டிருந்தது. ஒரு வகையில் அதுவே அவருடைய இறுதியான உச்ச சோதனையாயிருந்து. ஜீவனைப் பற்றி அறிந்த மற்றும் அதைப் பெற்றிருந்ந ஒரே ஒருவராக பூமியில் அவர் மட்டுமே இருந்தார். மேலும் தனது தற்கால மற்றும் எதிர்கால நலன்கள் தனது பிதாவிடம் சரியான நிலையில் இருக்கின்றனவா என்பது குறித்த நிச்சயத்தை அவர் பிதாவிடம் தேடினார். பின்பு ஒரு பரலோக தூதனால் அவர் தேற்றப்பட்டார். பிதாவாகிய தேவன் தாமே அவரை பெலப்படுத்தினார். தனது ஜுவியத்தின் உச்சகட்ட சோதனையை அவர் ஜெயம் கொண்டார்.



# ஏசாயா 53:1-5

எங்கள் மூலமாய்க் கேள்விப்பட்டதை விசுவாசித்தவன்
யார்? **கர்த்தருடைய** புயம் யாருக்கு வெளிப்பட்டது?

2. இளங்கிளையைப்போலவும், வறண்ட நிலத்திலிருந்து துளிர்க்கிற வேரைப்போலவும் அவனுக்கு முன்பாக எழும்புகிறார்; அவருக்கு அழகுமில்லை, சௌந்தரியமுமில்லை; அவரைப் பார்க்கும்போது, நாம் அவரை விரும்பத்தக்க ரூபம் அவருக்கு இல்லாதிருந்தது.

3. அவர் அசட்டைபண்ணப்பட்டவரும், மனுஷரால் புறக்கணிக்கப்பட்டவரும், துக்கம் நிறைந்தவரும், பாடு அநுபவித்தவருமாயிருந்தார்; அவரைவிட்டு, நம்முடைய முகங்களை மறைத்துக்கொண்டோம்; அவர் அசட்டைபண்ணப்பட்டிருந்தார்; அவரை எண்ணாமற்போனோம்.

- 4. மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு, நம்முடைய துக்கங்களைச் சுமந்தார்; நாமோ, அவர் தேவனால் அடிபட்டு வாதிக்கப்பட்டு, சிறுமைப்பட்டவரென்று எண்ணினோம்.

  5. நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்.

இறுதியில் கல்வாரியில் நமது கர்த்தர் சிலுவையில் ஜீவன் விட்டதை நினைவுகூர்கின்றோம். எப்பேர்பட்ட பலி அது! உண்மையில் ஆபிரகாம் தனது குமாரனாகிய ஈசாக்கை மோரியா மலையில் வெட்டவில்லை. ஆனால் நமது பரமபிதாவோ, தனது ஒரே பேறானவரை உண்மையிலேயே வெட்டினார்.(பலியாக்கினார்). எத்தகைய அன்பு நம் பிதாவினுடையது, எத்தகைய தியாகம் நம் கர்த்தருடையது. நம் கர்த்தர் தன்னை ஆதாமிற்கான மீட்கும்பொருளாகவும், அதேநேரம் பாவ நிவாரண பலியாகவும் தன்னை ஒப்புவித்தார். கல்வாரி சிலுவையானது, நம் கர்த்தருடைய கீழ்படிதலுக்கான பரீட்சையாக இருந்தது. தேவன் தன்னைக் கைவிட்டதை அறிந்த போதும், பிதாவின் நோக்கத்திற்குக் கீழ்படிந்து, எல்லாம் முடிந்தது, என்ற வார்த்தையின் மூலம், தன்னைப் பற்றிய பிதாவின் சித்தத்தை நிறைவேற்றி, தன் ஆவியினை பிதாவின் கரங்களில் ஒப்புக்கொடுத்தார். மரித்தார்!

<u>பாடல் - 4</u>

# என் பாவ பரிகாரியே



உம் இரத்தத்தால் எனைக் கழுவுமையா
புது ஜீவன் தரும் தேவனே - 2
மனம் மாறச் செய்து நல்குணம் யாவும் தந்து - 2
மறுரூபமாக்கும் ஐயா - என்னை
மறுரூபமாக்கும் ஐயா

என் பாவபரிகாரியே

என் ஜீவ உபகாரியே - 2

இறையேசுவே மறைமாமணியே

இறையாசீர் அருள்வீரையா - 2

கறையாவும் போக்கி என் குறையாவும் நீக்கி

புதுவாழ்வு அளிப்பீரையா - எனக்கு

புதுவாழ்வு அளிப்பீரையா

எனக்காகவே நீர் மரித்தீரய்யா

எனக்காக உயிர்த்தீரய்யா - 2

உமைப்போல நானும் பிறர்க்காக வாழ - 2

கிருபையால் மூடும் ஐயா - என்னை

உம் கிருபையால் மூடும் ஐயா

# வெளி 1:12,13

- அப்பொழுது என்னுடனே பேசின சத்தத்தைப் பார்க்கத் திரும்பினேன்; திரும்பினபோது, ஏழு பொன் குத்துவிளக்குகளையும்,

  13. அந்த ஏழு குத்துவிளக்குகளின் மத்தியிலே, நிலையங்கி தரித்து, மார்பருகே பொற்கச்சை கட்டியிருந்த மனுஷகுமாரனுக்கொப்பானவரையும் கண்டேன்.

# எபிரேயர் 4:15,16

நம்முடைய பலவீனங்களைக்குறித்துப் பரிதபிக்கக்கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல், எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார்.

ஆதலால், நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங்கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம்.

நமது கர்த்தர் இப்பொழுது, பிதாவின் சர்வ வல்லமையினால் மூன்றாம் நாளில் உயிர்த்தெழுப்பப்பட்டு, தெய்வீக சுபாவம் உடையவராய். பிதாவைத் தவிர சர்வத்தின் மீதும் அதிகாரமுடையவராய் இருக்கின்றார். தனது ஈடுபலியின் பலன்களை உலகத்திற்கு அளிக்கும் முன், பரமபிதா தனக்கு அளித்துள்ள மற்றொரு வேலையை அவர் செய்து வருகின்றார். தனது சரீரமாக இருக்கப்போகும் மெய் சபையை தேர்ந்தெடுப்பதே அவ்வேலை. சுவிசேஷ யுகம் முழுவதும் அச்சபை வகுப்பாருக்கு தலையாக இருந்து அவர்களை வழிநடத்தி வருகிறாா. அந்த மாபெரும் அழைப்பில் தான் இன்று நாம் இருக்கிறோம். இந்த அழைப்பில் ஒவ்வொரு நாளும் நமது பாடுகள், பெலவீனங்கள், சோர்வுகள், வெற்றிகள் அனைத்திலும் அவரே இரட்சகராக, நமக்கு உற்ற தோழராக, சகோதரராக, மேற்பார்வையாளராக, நமக்காக பரிந்து பேசுகிறவராக, மணவாளராக, மேலும் பாவம், மாம்சம், பிசாசுடனான தற்போதைய நமது யுத்தத்தில் இரட்சிப்பின் அதிபதியாக இருக்கிறார்.

# பாடல் - 5

# சேனை அதிபன்

சேனை அதிபன் நம் கர்த்தருக்கே

செலுத்துவோம் கனமும் மகிமையுமே - 2

அற்புதமே தம் அன்பெமக்கு - அதை

அறிந்தே அகமகிழ்வோம் - 2

ஜெயகிறிஸ்து முன் செல்லுகிறார்

ஜெயமாக நடத்திடுவார்

ஜெயக் கீதங்கள் நாம் பாடியே

ஜெயக் கொடியும் ஏற்றிடுவோம்

ஜெயம் அல்லேலூயா அவர் நாமத்திற்கே - 2

மேய்ப்பனில்லாத ஆடுகட்கே

நானே நல்ல மேய்ப்பன் என்றார் - 2

இன்ப சத்தம் பின் சென்றிடுவோம் - 1

இன்பப் பாதை காட்டிடுவார் - 2

கறைதிரை முற்றும் நீங்கிடவே

கர்த்தர் நம்மைக் கழுவிடுவார் - 2

வருகையில் எம்மைச் சேர்க்கும் வரை - 1

வழுவாமல் காத்துக் கொள்வார் - 2

அன்பானவர்களே, நமது கர்த்தருடைய அடுத்த நிலையானது, தமது இரண்டாம் வருகையில் இராஜாதி இராஜாவாக வந்து உலகத்தை ஆளகை செய்வதும், தமது ஈடுபலியின் புண்ணியங்களை உலகத்தின் மீது பொருத்துவதும், மத்தியஸ்தராக இருந்து நமது பிதாவுடன் மனுக்குலத்தை ஒப்பரவாக்குவதுமாக இருக்கிறது. அத்தகைய இம்மானுவேலின் ஆளுகை பற்றிய ஒரு பதிவு.

## <u>பாடல் - 6</u>

# ஆயிர வருட

ஆயிரம் வருட அரசாட்சியே
பரிசுத்தவான்களின் இராஜ்ஜியமே
பரம பிதா வேத வாக்கிதே
பசுமை பொற்காலம் நெருங்கிடுதே

வறண்ட நிலங்களும் செழித்தோங்குமே

விருட்சங்கள் இனிய கனி தருமே - 2

அமைதியும் நிலவும் சுக வாழ்வு துளிர்க்கும்

அற்பாயுசுள்ளோர்கள் அதில் இல்லையே - 2

கிறிஸ்தேசு ராஜா புவி ஆள்கிறார்

கிடைக்கும் நல் நீதி எளியவர்க்கே - 2

பரிபூர்ணமடைந்த மெய் தூய பக்தர்கள்

பரனோடு நீடுழி அரசாளவே - 2

# 1 கொரி 15:24-26

- அதன்பின்பு முடிவு உண்டாகும்; அப்பொழுது அவர் சகல துரைத்தனத்தையும் சகல அதிகாரத்தையும் வல்லமையையும் பரிகரித்து, தேவனும் பிதாவுமாயிருக்கிறவருக்கு ராஜ்யத்தை ஒப்புக்கொடுப்பார்.

  25. எல்லாச் சத்துருக்களையும் தமது பாதத்திற்குக் கீழாக்கிப்போடும்வரைக்கும், அவர் ஆளுகைசெய்யவேண்டியது.

# 1 கொரி 15:28

- பரிகரிக்கப்படுங் கடைசிச் சத்துரு மரணம்.
- சகலமும் அவருக்குக் கீழ்ப்பட்டிருக்கும்போது, தேவனே சகலத்திலும் சகலமுமாயிருப்பதற்கு, குமாரன் தாமும் தமக்குச் சகலத்தையும் கீழ்ப்படுத்தினவருக்குக் கீழ்ப்பட்டிருப்பார்.

# வெளி 21:5

அங்கே இராக்காலமிராது; விளக்கும் சூரியனுடைய வெளிச்சமும் அவர்களுக்கு வேண்டுவதில்லை; தேவனாகிய **கர்த்தரே** அவர்கள்மேல் பிரகாசிப்பார். அவர்கள் சதாகாலங்களிலும் அரசாளுவார்கள்.

அன்பு சகோதர சகோதரிகளே, இவ்வாறாக மனுக்குலம் பரிபூரண நிலைக்கு வந்த பின்னர் சகலத்தையும் அவர் பிதாவுக்க ஒப்புக்கொடுத்து, அவருக்குக் கீழ்ப்படிந்திருப்பார் என்பதைக் காணும்போது மீண்டும் அவருடைய கீழ்படிதலுக்கான மிகச்சிறந்த உதாரணத்தை இங்கே காண்கிறோம். இயேசு கிறிஸ்து நேற்றும், இன்றும், என்றும் மாறாதவராயிருக்கிறார் என்பது இங்கே விளங்குகின்றது. மேலும், அவர் அல்பாவும் ஒமேகாவுமாயிருக்கிறார், என்பதன்படியே அவர் தேவனுடைய திட்டத்தின் துவக்கமும் முடிவுமாக இருக்கிறார் என்பதை இங்கே நாம் காண முடிகிறது. இப்பேர்பட்ட நமது கர்த்தரை நமக்கு பரிசாக அளித்த தேவன், நித்தியத்திற்கும் துதிக்கப்படத்தக்கவர். மேலும், நம் தேவனை துதிக்கவே அவருடைய படைப்புகளாகிய நாம் படைக்கப்பட்டிருக்கிறோம் என்பதை அறியும் போது, இன்று நம் தேவனுடைய ஒரே பேறானவரை துதிக்கக் கிடைத்த இந்த வாய்ப்பின் மூலம் நமது படைப்பின் நோக்கத்தை இன்று அடைந்தவர்களாகவே நாம் உணர்கிறோம். ஆம்! நன்றி எங்கள் அன்பான பிதாவே, நன்றி எங்கள் அன்பின் கர்த்தரே, இந்த மாபெரும் சிலாக்கியத்திற்கு, இந்த மாபெரும் பாக்கியத்திற்கு!

# வெளி 5:13

அப்பொழுது, வானத்திலும் பூமியிலும் பூமியின் கீழுமிருக்கிற சிருஷ்டிகள் யாவும், சமுத்திரத்திலுள்ளவைகளும், அவற்றுளடங்கிய வஸ்துக்கள் யாவும்: சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் ஸ்தோத்திரமும் கனமும் மகிமையும் வல்லமையும் சதா காலங்களிலும் உண்டாவதாக என்று சொல்லக்கேட்டேன்

## பாடல் - 1

# கிருபாதார பலியாமே

